**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-7 |
| Name | : | Mrs. Muhil |
| Husband Name | : | Isakki Muthu |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2024.

எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது முத்தனம்பாளையம் சாரணம் ஜயப்பா நகரில் குடியிருந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எங்கள் தெருவில் குடியிருந்து வருகிறார். கடந்த 28.11.2023 அன்று இரவு 10.30 மணியளவில் என் வீட்டிற்கு அருகே உள்ள தினேஷ்குமாரும் கோமதிராணியும் பேசிகொண்டு இருந்தார்கள். அப்போது சண்டை நடந்தது நான் வெளியே வந்து பார்க்க அங்கு வந்த நபர் தான் கோமதிராணியை அடித்தார். அதை நான் பார்த்தேன். அந்த அடித்த நபர் வண்டியில் ஏறி போய் விட்டார்.

நான் அங்கு சென்று பார்க்க கோமதிராணி அடிப்பட்டு கீழே கிடந்தார் ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர் தான் கோமதிராணியை அடித்தவர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சரவணம்ஜயப்பா நகரில் எவ்வளவு வீதிகள் உள்ளது என்றால் சரியாக சொல்ல இயலவில்லை குறுக்கும் நெருக்குமாக உள்ளது நிறைய வீதிகள் உள்ளது. அங்கு உள்ள வீடுகள் அனைத்திற்கும் வீதிகளின் பெயர்கள் உள்ளது ஆனால் குறிப்பாக எழுதப்பட வில்லை. அந்த வீதியில் குடியிருப்பவர்களுக்கு வீதி பெயர்கள் கதவு எண்கள் தெரியும் என்றால் ஆமாம். போலீஸ் என்னை விசாரிக்கும்போது எந்த வீதியில் கதவு எண்ணில் குடியிருக்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு நான் குடியிருப்பதை காண்பிக்க எனது ஆதார் அட்டை, அடையாள அட்டை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தகராறு நடந்ததாக கூறும் இடத்தில் வீடுகள் எதுவும் இல்லை என்றால் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு பெயர் எதுவும் இல்லை. கம்பவுண்ட் வீட்டில் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் கம்பவுண்டில் தரை தளத்தில் 2 வீடுகளும் முதல் தளத்தில் 1 வீடும் உள்ளது.

2. அ.சா. 2 ஏற்கனவே எனக்கு தெரியும் என்றால் அந்த பகுதியில் குடியிருக்கிறார் பார்த்துள்ளேன். அ.சா.1 ஐ தெரியுமா என்றால் தெரியாது. போலீஸ் விசாரணையில் தினேஷ் குமாரை எனக்கு எப்படி தெரியும் என்று சொன்னேனா என்றால் சம்பவம் நாளில் தான் தெரியும் அதனால் சொல்லவில்லை. போலீஸ் விசாரணையில் அடித்ததாக கூறும் நபரின் அங்க அடையாளங்கள் ஊயரம், நிறம் குறித்து கூறினேனா என்றால் பார்த்தால் அடையாளம் தெரியும் என்று தான் கூறினேன். சம்பவ நடந்த பின்னிட்டு அந்த நபரை நான் வேறு எங்கேயாவது வைத்து அடையாளம் காண்பித்தேனா என்றால் இல்லை தற்போது தான் அடையாளம் காண்பித்தேன். கீழே கிடந்த நபரை பற்றி நான் போலீஸ்கோ அம்புலன்ஸ்கோ தகவல் சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார் என்னை

எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து. என்னை போலீஸ் விசாரிக்கும்போது தினேஷ் குமார் உடன் வந்தாரா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் சம்பவம் நடந்த இடம் குறித்து குறிப்பாக அடையாளம் காணும்வகையில் இடத்தை சொன்னேனா என்றால்இல்லை.

3. நான் சொல்வது போல் நான் சொல்லும் முகவரியில் குடியிருக்கவில்லை என்றும் எனது வீட்டின் முன்பாக இந்த வழக்கு சம்மபவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் வழக்கில் சொல்லியுள்ள சம்மபவத்தை நேரில் பார்க்கிவ்லலை என்றும் அ.சா. 2 எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் படி அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 போலீஸ் விசாரணையில் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றால் தெரியாது. தற்போது தான் எதிரியை நான் முதல் முதலில் பார்க்கிறேன் என்றும் இதற்கு முன்பாக அவரை பார்த்து இல்லை எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. போலீசாரும் அ.சா.2 கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.27 17:10:34 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Depositiiton of Witness for | : | PW-8 |
| Name | : | Mr. Vijay |
| Father Name | : | Duraisamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2024.

எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் சரணம் ஐயப்பா காலனியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.11.2023 அன்று இரவு பணிக்கு சென்றிருந்தேன் மறுநாள் காலையில் எப்போழுதும் போல் நான் வேலைக்கு செல்லும்போது எங்கள் வீட்டிற்கு முன்பாக முத்தனம்பாளையம் ரோட்டில் பொதுமக்கள் போலீசார் கூட்டமாக இருந்தார்கள். நான் உடன் சென்று பார்க்க முதல் நாள் இரவு யாரோ இரண்டு நபர்களை அடித்துவிட்டு சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். அங்கு போலீசார் drawing

போட்டார்கள் அதில் நான் கையெழுத்து போட்டேன். இன்னொருவர் பெயர் தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் 1வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் அ.சா.ஆ– 6 ஆகும். அது சம்மந்தமாக போலீசார் விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காலையில் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வேன் என்றால் 9 மணி. 9 மணிக்கு கம்பெனியில் இருக்கவேண்டும் என்றால் எத்தனை மணிக்கு நான் வீட்டில் இருந்து செல்லவேண்டும் என்றால் 8.30 மணிக்கு செல்லவேண்டும் ஆனால் முதல் நாள் இரவு பணி என்பதால் 9 மணிக்கு சென்றேன். போலீஸ் விசாரணையில் நான் முதல் நாள் கம்பெனியில் இரவு பணி பார்த்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் அதிகாரிகளின் பதவிகள் எனக்கு தெரியும். படம் எந்த அதிகாரி வரைந்தார் என்றால் அதை பற்றி தெரியவில்லை. போலீசார் கையெழுத்து போடச்சொன்னததால் போட்டேன் என்றால் இல்லை விசாரித்தார்கள். நான் சொல்வது போல் போலீசார் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை தயாரிக்கவில்லை என்றும் ஏற்கனவே காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையெழுத்துப்போட்டேன் என்றும் தற்போது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.27 17:11:09 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.